Deposition of Witness for : PW-1 | Date : 23/11/2023
Case No. : O.S. 01/2023 | Nationality : Indian
Name :ஜெயக்குமரன் | Religion :
Father's/Husband's Name : ஜானகிராமன் | Age :55
Village :
Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்கு சொத்தான சர்வே எண்.647/22 ல் கண்ட சொத்திற்கு வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்கிறேன். சர்வே எண்.647/22 ன் பழைய புல எண்.79/4 என்றால் சரிதான். பழைய புல எண்.79/4 க்கான பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பழைய புல எண்.79/4 க்கான எந்த வருவாய் ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. பழைய புல எண்.647/22 ல் கண்ட சொத்தினை அளவீடு செய்து பார்த்தேனா என்றால் அளவீடு செய்து பார்த்தேன். எப்போது அளவீடு செய்து பார்த்தேன் என்றால் 10/12/2022 ம் தேதி அளவீடு செய்து பார்த்தேன். அவ்வாறு அளவீடு செய்து சர்வேயர் கொடுத்த அறிக்கைளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சர்வேயர் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1996 ம் ஆண்டு எனது தகப்பனாருக்கு சர்வே நோட்டிஸ் கொடுக்கப்பட்டதில் இருந்து தற்போது வரை தாவா சொத்து அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் 5 1/2 ஏர்ஸ் மனை அனுபவத்தில் இல்லை என்பதால் தான் அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

3. எனது தகப்பனார் பெயரிலோ, எங்கள் பெயரிலோ குடியிருப்பு பட்டாவா அல்லது மனைவரி தோராய பட்டாவோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் குடியிருப்பு பட்டா அல்லது மனைவரி தோராய பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கு புறம் உள்ள கோவில் நிர்வாகத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது உண்மையான அனுபவம் நீதிமன்றத்திற்கு தெரிந்து விடும் என்பதால் தான் இவ்வழக்கில் கோவில் நிர்வாகத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூலமாக எனது சொத்தை அளவீடு செய்து பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபணை எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

4. வா.சா.ஆ.2 பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தில் கண்ட சொத்து விவரத்தில் மரங்கள் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது வழக்குரையில் கண்ட சொத்து விவரத்தில் மரங்கள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்குரையில் கண்ட சொத்து விவரத்தில் வீடு மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் மட்டும் தான் எங்களுக்கு அனுபவம் உள்ளது என்றாலும், அதனால் தான் வீட்டை மட்டும் காண்பித்து வா.சா.ஆ.2 ஆவணம் மற்றும் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. விராலி மலை சந்து பகுதிக்கும் எனது வீட்டிற்கும் வடக்கு புறம் உள்ள கோவிலுக்கு சொந்தமான காம்பவுண்ட் சுவர் எனது வீட்டு சுவர் வரை இணைந்துள்ளது என்றால் சரிதான். எனது அனுபவத்தில் உள்ள சொத்தின் விஸ்தீரணம் 3.67 ஏர்ஸ் தான் என்றாலும், 5 1/2 ஏர்ஸ் இல்லை என்றாலும் சரியல்ல. 5 1/2 ஏர்ஸ் அனுபவத்தில் உள்ளது. புல எண். 647/22 ல் 5 1/2 ஏர்ஸ் விஸ்தீரணத்திற்கும் புவி ஸ்துதியில் உள்ள விஸ்தீரணத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள

விஸ்தீரணத்திற்கு என்னிடம் அனுபவம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 பாகப்பாத்திய விடுதலை பத்திர ஆவணம் எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்டுள்ள ஆவணம் என்பதால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் எவ்வித உரிமையோ கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் சொத்தின் விஸ்தீரணத்தை காட்டகூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ-2 ஆவணத்திலும், வழக்குரை சொத்து விவரத்திலும் மரங்கள் இல்லாததால், இல்லாத மரத்தை 11/12/2022 ம் தேதி வெட்ட வந்ததாக பொய்யாக வழக்கு மூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், 11/12/2022 ம் தேதி எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

6. 5/12 ஏர்ஸ் விஸ்தீரணத்திற்கு முறையான பட்டா இல்லாமலும், மூல ஆவணம் எதுவும் இல்லாமலும் செய்து கொண்ட பாகப்பாத்திய விடுதலை பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 5 1/2 ஏர்ஸ் அனுபவத்தை நிரூபிக்க நேரடியாக கிராம நிர்வாக அலுவலர் சான்று எதுவும் தாக்கல் செய்யாததால் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் உரிமை மூலத்தை மறுத்துள்ளதால் நான் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ள வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும், சட்டப்படி செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

**Sd/N.Sivapalani/**

District Munsif cum Judicial Magistrate,

Thiruvidaimarudur.